# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKUL

| | | |
|---|---|---|
| Case number | : | **STC 747 OF 2024** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **ஜெயராஜ்** |
| Father Name | : | **கிறிஸ்டோபர்** |
| Age | : | **62** |

**ACCUSED PRESENT.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.11.2025.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பைனான்ஸ் மற்றும் மள்ளிகை பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறேன். நான் 2021 காலகட்டத்திலும் பைனான்ஸ் செய்து வந்தேன் என்றால் சரிதான். நான் பைனான்ஸ் செய்யும்போது யாருக்கேனும் கடன் கொடுக்கும்போது எனது பார்ட்னரையும் கேட்டுக் கொடுப்பேனா அல்லது நானே தன்னிச்சையாக கொடுப்பேனா என்றால் தன்னிச்சையாக தான் கொடுப்பேன். நான் பொதுவாக யாரேனும் பெரிய தொகை கடன் கேட்டால் எனது பார்ட்னரை கேட்டுக் கொடுப்பேன், சின்னத்தொகையாக இருக்கும் பட்சத்தில் நானே கொடுத்துவிட்டு தகவல் மட்டும் சொல்வது வழக்கம்.

2. நான் ஆன்லைன் பேஷண்ஸ் மற்றும் கியூப் நீட் பேஷண்ஸ் நிறுவனத்தில் அக்கவுண்ட்ஸ் மேனேஜராக இருந்துள்ளேன். நான் B.A., Corporate Secretaryship படித்துள்ளேன். பைனான்ஸ் நிறுவனத்தில் நானும் எனது மனைவி இயேசு மேரி என்பவர் தான் பங்குதாரர்களாக உள்ளோம்.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2025.11.12 19:01:13 +0530

நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பார்ட்னர்ஷிப் டீட் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் பார்ட்னர்ஷிப் டீடில் இரண்டு பேர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரிதான். நான் மகளிர் சுய உதவி குழு கடன் கொடுக்கும் வழக்கம் உள்ளதா என்றால் உள்ளது, முதலில் 2018-2022 காலகட்டத்தில் கொடுத்தேன் தற்போது கொடுப்பதில்லை.

3. எதிரி கொடுத்த கடன் விண்ணப்பத்தில் அவருக்கு உத்தரவாதமாக யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் உத்தரவாதம் என்ற இடத்தில் யாரும் கையொப்பம் செய்யவில்லை. அந்த கடன் விண்ணப்பத்தில் இணைந்து இருக்கும் கடன் உறுதி சீட்டில் யாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் பைனான்ஸ் செய்வதற்கு மணி லெண்டிங் லைசன்ஸ் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தின் எந்த ஒரு பரிவர்த்தனையும் வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு பூர்வீகத்தில் சொந்த வீடு உள்ளது ஆனால் ஊத்துக்குளியில் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். நான் எதிரிக்கு ரூபாய் 12 லட்சம் கடன் கொடுத்துள்ளேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் எனது மனைவிக்கு தெரியும். எனது மனைவியை விசாரித்து மேற்படி விவரத்தின் உண்மை தன்மையை தெரிந்து கொள்வதில் எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

4. மேற்படி காசோலை 04.09.2024 தேதியன்று நான் எதிரி சரண்யா மற்றும் அவரது கணவர் சங்கர் முன்னிலையில் எழுதினேன். எதிரி காசோலை கொடுத்த பின்பு நான் அவரிடம் வேற எந்தெந்த ஆவணங்களை அந்த தேதியில் எழுதி வாங்கினேன் என்றால் வேறு எந்த ஆவணத்தையும் வாங்கவில்லை. மேற்படி வழக்கு காசோலையில்

தொகையை எழுத்துக்களால் எழுதியது யார் என்றால் அவர் சொல்ல நான் தான் எழுதினேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்னதாக எனக்கும் எதிரிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருந்தது. எதிரி மேற்படித்தொகைக்கு வட்டி கொடுத்ததாக எனது புகாரிலும் முதல் விசாரணையிலும் கூறியுள்ளனேனா என்றால் அதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

5. நான் புகாரில் கூறியுள்ளது போல் எதிரிக்கு ரூபாய் 12 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றாலும், நான் கொடுக்காத கடனுக்கு எதிரி வட்டி எதுவும் செலுத்தியதில்லை என்று சொன்னாலும் சரியல்ல. கடன் விண்ணப்பத்தில் எதிரி 13.08.2021 தேதியில் கையொப்பம் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் தேதியில் எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வந்து கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அதற்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது கை இருப்பில் இருந்து தான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். அவ்வாறு நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனது கை இருப்பில் ரூபாய் 12 லட்சம் இருந்தது என்று காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி